ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

தகுந்த மனுஷ்யர்களுக்கு ஸம்பாவனை செய்வதுதான் உசிதமாய் இருக்கும். தகாதவர்களுக்கு ஸம்பாவனை செய்வது அனுசிதமேயாகும். பொதுவாய் எல்லோருக்குமே ஸம்பாவனை செய்யவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்கள் கூட எல்லோர்களுக்கும் ஸமமாக ஸம்பாவனை செய்வதுமனுசிதமே.ஆகவே அவரவர்களது யோக்யதைக்குத்தக்கவாறு ஸம்பாவனை செய்வதே தகுதியாகும். ஆபரணங்கள் அங்கங்களில் அணிய வேண்டியதாயினும். அதற்குத் தகுந்த ஆபரணங்களை அணிவதுதான் தகுதியாயிருக்கும். கையிலணியவேண்டியதைக் காலிலும், அதிலணிய வேண்டியதைக் காதிலும், அணிந்துகொள்வது அழகாயிராது. இப்படி இருக்கையில் தற்காலத்தில் சிலர் தங்களது கிருஹங்களில் நடைபெறும் சுபசோபனுதிகாரியங்களில் பெரியோர்களுக்கு ஸம்பாவனையை நம் முன்னோர்கள் வழக்கமாய் நடத்திவந்ததற்குப் பதிலாக மற்றவருக்கும் ஸம்பாவனையென்று பெயர் வைத்து எதையோ கொடுத்து வருகிறார்கள். அப்படி ஏதோ கொடுப்பதற்கு ஸம்பாவனையென்று பெயர் வைப்பது பொறுத்தமுடையதாகத் தோன்றவில்லை. இது அபிமானத்தால் கொடுக்கப்படுவது பற்றி அபிமானதானமாகும். அபிமானத்தால் ஒருவன் பத்னிக்கு பொன்னும் புடவையும் வாங்கிக்கொடுப்பானேயாகில் அது ஸம்பாவனை ஆகமாட்டாது. பக்தியால் செய்யப்படுவதே அந்தப் பெயருக்குத் தகுதியாகும். ஒரு சங்கத்தின் உதவிக்காகவும், ஒரு கூட்டத்தின் திட்டத்திற்காகவும் இது போன்ற வேறு காரியங்களுக்காகவும் அபிமானத்தால் கொடுக்கப்படுவதெல்லாம் ஸம்பாவனையாகமாட்டாது. ஆகையால் நம்முன்னோர் வழங்கி வந்தபடியே நாமும் வழங்குவதும் அவர்கள் செய்துவந்தபடியே நாம் நம் கிரஹங்களில் நடைபெறும் சுபசோபனுதிகளில் செய்து வருவதுமே உசிதமாகும். இதனால் அபிமானத்தால் செய்யப்படுவதைத் தடுக்கவில்லை. பழைய வழக்கத்தை விடாமல் நடத்தி நம் முன்னோர் சிரேயஸ்ஸையடைந்தது போல் நாமும் சிரேயஸ்ஸை அடையவேண்டுமென்பது இதன் கருத்து. அப்படியே எல்லோரும் செய்து சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்

# ஆர்யதர்மம்.

சுக்ல-ஸு வைகாசி-மீ ௧௰௨


## ஸம்ஸ்காரம்.

(244-வது பக்கத்தொடர்ச்சி.)

### (8) உபனயனம்.

பிராம்மணாதிகளுக்கு உபனயனஸம்ஸ்காரத்தில் இரண்டாவது ஜனனம் உண்டாகிறதென்றும், அதனாலிவர்கள் துவிஜர்கள், (இருபிறப்பையுடையோர்கள்) என்றும் அவ்விரண்டுபிறப்பினுள் இரண்டாவது பிறப்புமிகச்சிறந்ததென்றும் கூறப்பட்டது. ஆபஸ்தம்பமுனிவரும்

"शरीरमेव मातापितरौ जनयतः"

என்று கூறியவிடத்து இதைஸ்பஷ்டமாகக்கூறியுள்ளார், பிராணிகளுக்கு பஞ்சபூதவடிவமான இந்த ஸ்தூலசரீரம் கர்மவசத்தால் அமைவதுபோல், ஞானவடிவமான ஆந்தரசரீரமொன்று புண்ணியவசத்தால் அமைகின்றதாம். ஒருபிராணியின் ஸ்தூலசரீரத்திற்குக் காரணமாகிய பூதஸூக்ஷ்மங்களோடு லோகாந்தரத்திலிருந்து வருஷதாரைவழியாய், நெல்லு, கொள்ளு, எள்ளு, முதலிய தின்பண்டங்களில் தங்கிநின்றப்பிராணி அத்தின்பண்டங்களையுட்கொண்ட பிதாவின் ரேதஸ்ஸில் சிறிதுகாலம் தங்கியிருப்பதுபோல், புண்ணியவசத்தால் ஞானசரீரத்தையடைய அர்ஹதையுள்ளப்பிராணி அந்த ஞானசரீரத்திற்குக் காரணமாகிய ஆசாரியனது "பலதிசைகளினின்றும் பிரம்மசாரிகள் என்னிடம் வருவார்களாக" என்றகருத்தைவிளக்கும் தைத்திரீய சுருதியில் கூறியபடி, பிரார்த்தனாவடிவமான ஸங்கல்பத்தில் தங்கியிருக்கின்றான், ஸ்தூலசரீரத்தை எடுப்பதற்க்கு பித்ருகர்ப்பத்தில் தங்கிநின்றதுபோலவாம் ஞானசரீரத்தை யடைவதற்க்கு ஆசிரியாது ஸங்கல்பத்திற்கு விஷயமாக ஆவது, பிதாவினிடத்திலிருந்து ரேதஸ்ஸோடு கலந்துநின்றவன் மாதாவின்கர்பத்திற் சேறுவதுபோல

வாம், பிறந்தவுடன் ஒன்றுமறியாதிருக்குங்காலம்,கர்ப்பத்திற்குள் கைகள், கால்கள், முளைப்பதுபோலவாம் புரளுவதும் தவிழ்வதும், தவிழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகளைக்கண்டு இதற்குக் கை கால்முளைத்துவிட்டது என்று சொல்வதுவழக்கம் கர்ப்பத்திற்குள் இந்திரியாதிகளுண்டாவதுபோலவாம்,நடப்பதும் மழலைச்சொல் சொல்வதும், ஆங்கு சில அறிவுகள்தோன்றுவது போலவாம், அக்ஷராப்பியாஸ மாரம்பிப்பது ஜன்மாந்தரங்களில் அனுபவிக்கப் பட்டவைகளெல்லாம் ஞாபகத்திற்குவா, அந்தக் கஷ்டங்கள் ஸஹிக்கமுடியாமல், இந்த கர்ப்பத்தைவிட்டு வெளிப் பட்டவுடன் கர்மயோக பக்தியோக ஞானயோகங்களையாசிரயித்து சிரேயஸ்ஸையே யடையமுயலுவேன் என்று நினைப்பது போலவாம், ஆசிரியனிடம்சென்று கவியைக்கற்பதற்காகஉபனயனம் செய்துகொள்ள நினைப்பது. கர்பத்தினின்று வெளிப்படுவதுபோலவாம், வித்யாபியாஸத்திற்காக குருகுலவாஸம்செய்வது இவ்வாறு கர்ப்பவாஸத்தால் ஸ்தூலசரீரம் பூர்த்தியடைவதுபோலவாம், ஆசிரியனது ஸங்கல்பத்திற்கு விஷயமானதுமுதல் குருகுலவாஸ மீருயுள்ளவைகளால் ஞானசரீரம் பூர்த்தியடைவது. இதனால் உபனயனமானல் இரண்டாவதுபிறப்பு எற்படுகின்றது, அதனுல் அத்தகைய உபனயன ஸம்ஸ்காரத்தையடைந்தவர்கள் துவிஜர்களென்றும், வேதாத்தியயனத்திற்கு அதிகாரிகள்என்றும் எற்படுகின்றது. ஆகையால் உபனயனமானவுடன் ஆங்கிலங்கற்பதற்காகப்பள்ளிக்கனுப்பும் பிள்ளைகளுக்கும் வேதாத்தியயனம் செய்விப்பது தாய் தந்தைகளின் அவசியமானகடமையாகும். சுபம்!

பா—ர்.

---

## ஸ்வதர்ம்மமார்க்கமே சுகம்பெறும் வழி.

"ब्राह्मण्यात् सकलं प्राप्यं मोक्षश्चापि मुनीश्वर ।
तस्मात् सर्वप्रयत्नेन ब्राह्मणो धर्मतत्परः ॥"

பிராம்மண ஜன்மம் பெற்று வேதமார்க்கத்தை யவலம்பித்தவன் தர்ம, அர்த்த, காம, மோக்ஷ, மென்கிற நான்கு புருஷார்த்தங்களையும் அடையத்தக்கவனுகையால் எப்பாடுபட்டாலும் பிராமணன் எப்பொழுதும் தர்ம்மமார்க்கத்தில் ஆசையுள்ளவனுகயிருக்க வேண்டுமென நியமம் பிறந்திருக்கிறது.

முன்னொருக்கால் பிராம்மண்யம் பெறவேண்டுமென்று ஒருவன் உக்கிரதவம் புரிந்தான். தேவேந்திரன் அவ்விடம் வந்து வரம் பெற்றுக்கொள் என்றபோது பிராம்மண்ணியம் வேண்டுமெனக் கேட்டான். அதற்கு இந்திரன் காய்ந்த இரும்பானது குடித்த ஜலத்தை வெளிவிடாததுபோல வினைப்பயனால்கிடைத்த ஜன்மத்தை மாற்றிவிடமுடியாது பிராம்மண ஜன்மம் இலேசானதல்ல. நூறு சண்டாள ஜன்மம் பெற்று தன் ஸ்வதர்மானுஷ்டானம் வழுவாமல் செய்துவந்தால் நான்காவதாகிய சூத்திரஜன்மமும், அதின் தர்மநியமத்தால் மூன்றாவதான வைசிய ஜன்மமும் அதன்முறை தப்பாமல் நடந்தால் இரண்டாவதான க்ஷத்திரிய ஜன்மமும், அதன் ஸ்வதர்மானுஷ்டானத்தால் முதல் வர்ணமான பிராம்மண ஜன்மமும், இதிலும்பதினபிரம்ஜன்மம் ஸ்வதர்மானுஷ்டான சக்தியால் ரிஷிபதம் பெற்று ஜன்மலாபமடைய வேண்டும் என்பது நிச்சயம். இவ்வளவு கஷ்டஸாத்தியமான பிராம்மண்ணியத்திற்காக நீ இப்போது தவத்தால் சரீரத்தை வருத்திக்கொள்வது பிரயோஜனமற்ற காரியமென்று உபதேசித்தாரென பாரதம் கூறுகிறது. பிராம்மண ஜன்மத்தால் ஞானம் பெறுவதே முக்கிய பிரயோஜனம். இந்த ஞானத்திற்கு மனசுத்தி ஆவசியம். மனதை சுத்திசெய்ய ஸத்கர்மானுஷ்டானமே சக்தி வாய்ந்தது அந்த கர்மானுஷ்டானம் யாதென அறிந்துகொள்வது முதற்காரியம். தர்மானுஷ்டான முறைகளை வேதம், ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களால் அறியவேண்டும். அதுவும் ஓர் பரமாசாரிய புருஷர்களின் மூலமாகவே தெரிந்துகொள்ளவேண்டும்.

நமது ஸ்வதந்திர சக்தியாலறியக் கூடாதோவெனில் அப்போது அதன் சூக்ஷ்மதத்துவம் அறியமுடியாதெனவே சொல்லவேண்டும். நமது ஸனாதனதர்மங்கள் நவீனர்களுக்கு அப்பிரியமாகவிருப்பதற்கு முக்கிய காரணமென்னவென்றால், குருமூலமாக தெரிந்துகொள்ளாததும் ஸ்வசக்தியால் தெரிந்துகொண்டதாக அபிமானிப்பதுமேயாகும். "குருவின்றி படித்தது குணம் பொாது" என்றபடி ஸகலமும் ஸந்தேஹமாகவே தோன்றும் அதனால் மனத்திருப்தி ஒருக்காலுமுண்டாகாது. அசாஸ்திரமும் சாஸ்திரம்போலவே விளங்கும். அப்போது பாபத்தில் பயம் தோன்றாது யாவரும் எதுவும் செய்வதில் யாதொரு தடை

யுமில்லை என்று உபதேசித்து தர்மத்தை சிதறயடிப்பார்கள். இதுவே ஸ்வாதந்திரிய வித்யாப்பியாஸத்தின் பலன்.

தற்காலம் மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தைரியம்போல முன்னொருக்கர்லும் ஏற்பட்டதில்லை என்பது நிச்சயம். உலகில் ஒரு மதமும் உண்மையான ஆசார நியமத்துடன் காண்பதற்கு அரியதாய்விட்டது. இவன் இன்ன ஜாதி மனிதனென்று அனுஷ்டானத்தாலோ, ஆசாரத்தாலோ, நிச்சயிக்க ஸாத்தியமில்லை, சுருங்கச்சொல்லுமிடத்து ஸர்வமத ஆசாரமும் ஸர்வாசிரம நியமமும் எங்கும் காணலாம். இப்படிக் காண்பதற்கு சிக்ஷை நியமமில்லை என்று சொல்வதைவிட வேறுவழியில்லை. உலகில் ஸகல சராசர வஸ்துக்களையும், ஈசன் ஒன்றுக்குள்ளொன்று அடக்கியே நியமித்திருக்கிறார். ஆனதால் பயமற்ற பிராணிகளும் அடக்க முடியாத ஜீவராசிகளும் உலகிலில்லை, ஸகலமும் ஈசனில் அடக்கம் அந்த ஈசனை வெல்ல, வெகு ஸாமர்த்திய புத்தியால் வரம்பெற்ற ராவணனும், கார்த்தவீரியார்ஜ்ஜுனனுக்குள்ளடங்கியவனே அந்த கார்த்தவீர்யார்ஜ்ஜுனனும், பரசுராமனுக்குள்ளடங்கியவன் பரசுராமனும்ஸ்ரீராமனுக்குள்ளடங்கியவன். அசாங்களான பர்வதங்களை இந்திரன் அடக்கினான். விந்தியனை அகஸ்திய முனிவர் அடக்கினார். வன விலங்குகளை அரசன் வேட்டையாடி அடக்குகிறான். புருஷன் ஸ்திரீயையும், பிதாபுத்திரனையும், குரு சிடனையும், மனிதன் துஷ்டபராக்ரமமுள்ள யானை முதலிய மிருகங்களையும் அடக்கியாளுகிறான். வனமிருகங்கள் நாட்டில் பிரவேசிக்காமலிருப்பதும், மனிதர்கள் நீதி தவராமல் நடப்பதும், ராஜனின் செங்கோல் மகிமையேயாகும். சுருங்கச்சொன்னால் ஒரு தேவதை மற்றொரு தேவதையால் அடக்கப்படுகிறது. ஈசன் சராசரங்களை இவ்விதம் அடக்கியாளும் முறையை ஏற்படுத்தியிருக்கும்போது யாதொரு ஆசார அனுஷ்டானமும் மற்ற மனிதர்களை மாத்திரம் அடக்கியாள புருஷனில்லாமல்போய்விடவில்லை

"अन्तः प्रच्छन्नपापानां शास्ता वैवस्वतोयमः ।"

நாம் மறைவாகச் செய்த பாபங்களுக்குத்தகுந்த தண்டனை கொடுக்கிறவன் இயமன். நாம் எங்கு வித்யாப்யாஸம் செய்கிறோமோ அங்கு உத்தியோகம் கிடைப்பதில்லை. ஒருவன் திருடின இடத்தில் சிக்ஷையடைவதில்லை. உத்தியோக இடமும், தண்டனை

அடையும் இடமும் வேறு, கடன் வாங்கினவன் கடனைக்கொடுக்கச் சக்தியற்றவனாய்ப் புதுச்சேரி (Pondicherry) தேசம் போய் விட்டால் கடன் தீர்ந்துவிடமாட்டாது தர்மாதர்மங்களின் பலனைக் கொடுக்கக்கூடிய வேறு ஓர் இடமிருக்கிறது. ஆகையால் நமது அதர்ம்மச்செய்கைகள் தற்காலம் ஹிதம்போல் எண்ணப்பட்டாலும், யமன் என்ற சிக்ஷாகர்த்தா ஒருவனிருப்பதால் நம்மையடக்கியாள புருஷன் உண்டு என்பது உண்மை. தேவர்களும் செய்த குற்றத்திற்கு சிக்ஷை பெறவேண்டியதுதான்.

பிரும்மாவுக்கு "தக்ஷன்" யென்ற புத்திரன் ஒருவரிருந்தார். அவர் தன் பெண் "ஸதீதேவியை" பரமசிவனுக்கு விவாஹம் செய்துகொடுத்தார். நாம் பிரும்மாவின் புத்திரன், பரமசிவனின் மாமனார் என்ற அபிமானத்தால் மிக கர்வமடைந்திருக்கவே அக்காலத்தில் "ப்ரஜாபதிகள்" ஓர் யாகம் செய்யத்தொடங்கினார்கள். அந்த யாககாலத்தில் பரமசிவன் தனக்கு மாப்பிள்ளையாக இருந்தும் உபசாரம் செய்யவில்லையென்ற ஓர் துரபிமானத்தால்கோபங்கொண்டு தக்ஷன் யாகஸதஸ்ஸில் பரமசிவனை நிந்தனை செய்தான். பிறகு அவருக்கு ஹவிர்பாகமில்லாமல் ஓர் யாகமும் தான் செய்ய தீர்மானித்து அவ்விதமே வேள்வியும் துடங்கப்பட்டது. அதை அறிந்த "ஸதீதேவி" யாகசாலை வரவும் அவளை "தட்சன்" அனாதரவு செய்யவே அக்காரணத்தால் "ஸதீதேவி" யோகாக்கினியால் தன் சரீரத்தை தஹித்தாள். இதையறிந்த பகவான் மிகக்கோபங்கொண்டு "வீரபத்ரன்" மூலமாய் தக்ஷனை சிக்ஷித்தார். பிறகு தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பகவான் யாகத்தைப் பூர்த்தி செய்து தக்ஷனையும் அனுக்கிரஹித்தாரென்ற சரித்திர சுருக்கத்திலேயிருந்து பிரும்ம புத்திரனையும் அடக்கக்கூடிய மஹா புருடனில்லாமல் இருக்கவில்லை.

யாகவிதியைச்சற்று கவனிக்காமல் விரோதியென்ற ஓர் உத்தேசத்தாலும், அஹங்காரத்தாலும், வேதசாஸ்திரமார்க்கத்தைத் தப்பிநடந்ததாலும், தகுந்த சிக்ஷையடைந்தான். அதன் அறிகுறியாக என்றும் உலகில் பிரகாசிக்கும்படி தக்ஷனுக்கு ஆட்டின் முகமும் அடைய நேர்ந்தது. தக்ஷனையனுஸரித்த சில தேவர்களும், ரிஷிகளும் பரமசிவனால் அடையாள சிக்ஷையும் பெற்றார்கள். இதற்கெல்லாம் தக்ஷன் தர்மமார்க்கம் தப்பி நடந்ததல்லவோ காரணம். சிக்ஷையால் தர்மமார்க்கத்தையறிந்த "தக்ஷன்"

பிறகு பரமசிவனைத் துதிக்கும் காலத்தில் பிராமணன் ஸதாசாரம் ஈசுரன் இவர்களின் தத்துவரகஸ்யத்தை துதியால் நன்கு வெளியிட்டிருக்கிறார்.

“ भूयाननुग्रह अहोभवताकृतोमे ।
दण्डस्त्वया मयिभृतोयदपि प्रलब्धः ॥
न ब्रह्मबन्धुषु च वां भगवन्नवज्ञा
तुभ्यं हरेश्च कुतएव धृतव्रतेषु ॥ ”

ஓ பகவானே தாங்கள் என்னால் அவமதிக்கப்பட்டவர்களானாலும் எனக்கு கருணையுடன் சிக்ஷை ஏற்படுத்தினீர்களல்லவா. அதனால் எனக்கு மிகுதியான அனுக்கிரஹத்தையே செய்தீர்கள். இந்த சிக்ஷையை தாங்கள் செய்யாமல் போனால் நான் செய்த சிவாபராதத்திற்கு எனக்கு அழிவற்ற நரகம்ஸம்பவிக்கும். அந்தப் பெரும் துக்கத்தினின்றும் என்னைக் கடைத்தேர இச்சிறு சிக்ஷையைச் செய்தது அனுக்ரஹமேயாகும், ஆனால் தங்களுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும், அதமர்களாகிய பிராமணர்களிடத்திலும் உபேக்ஷை ஏற்படுவதில்லை. அவ்விதமிருக்க விருத நியமங்களை, ஆசரிக்கும் பிராமணர்களின் விஷயத்தில் உபேக்ஷை என்னஏற்படும் என்றார். இவ்விதம் “தக்ஷஸ்துதி” பாகவதத்திலிருந்து தர்மானுஷ்டான தத்பரனான பிராமணனுக்கு ஈசன் துணையாகிறானென்றும் விளங்குகிறபடியால் ஸதாசார நிரதர்களான நம்போலுள்ளவர்களுக்கும் ஈசனின் துணையும் உண்டாவதுஸித்தம்.

“ यान्तिन्यायप्रवृत्तस्य तिर्यञ्चोपि सहायताम् ।
अपन्थानन्तु गच्छन्तं सोदरोपि विमुञ्चति ॥ ”

தர்மமார்க்கத்தில் நடந்துவந்த ராஜன் ஒருவனை சத்ரு ராஜன்ஜயித்து இவனைப்பிடிக்க தூதர்கள் பின் தொடரவே ராஜன் தன் பிராணனை ரக்ஷிக்கக்கருதி வனம் சென்று ஓர் குகையினுட்சென்றான்.

அப்போது தர்மரூபியான பகவான் ஓர் சிலந்திரூபமாக நின்று வலையால் குகையின் வாயிலை மறைத்தார். அவ்வழியாக வந்த தூதர்கள் இவ்வலையைக்கண்டு இந்த குகையில் சிறிதுகாலமாக மனிதஸஞ்சாரமே இல்லையெனத் தீர்மானித்துப்போனார்கள்.

அதனால் ராஜனும் உயிர்பெற்றான். தர்மமார்க்கத்தை நம்பினவனுக்கு திர்யக்ஜர்துவும் உபகாரம் செய்யுமென்று இதனாலறிந்தோம். கெட்டவழியில் செல்லும் புருஷனை ஸகோதரனும் கைவிடுவான் என்பது துர்மார்க்ககாமியான "ராவணனை விபீஷணன்" கைவிட்டான் என்பதுமறியப்படுவதால் தர்மமார்க்கத்தில் பயமில்லை. அவ்வழி செல்லுகிறவர்களுக்கு ஈசன் துணைபுரிவானென்பது ஸத்தியம். நமது ஸனாதனதர்மமார்க்காகலியத்தை எந்தப்பெரியவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதென்று தயங்கவேண்டாம். "தட்சனிடம்" கேட்போமே அவர் நமக்கென்ன பதிலளிப்பார் அவரது அனுபவமுறையையேசொல்லுவார், அல்லது விசுவாமித்திரரிடம் கேட்போம் அவரும் அதையே சொல்லுவார் இவ்விதம்தர்ம்மமார்க்கத்தில் பிரவேசித்து ஜயம்பெற்றவர்களைக்கேட்டுத் தெரிந்துகொள்வதுதான் உத்தமமார்க்கம்.

உதாரணம் பொடிபோட்டுப்பழகிய பெரியவரொருவரை, அவ்விஷயமாக கேள்விகேட்டால் அவர்சொல்வதென்னவெனில் நான் உண்மைசொல்வதானால் இனியாரும் பொடிபோட்டுப் பழகக்கூடாது. நானதைப்பழக்கிவிட்டு, விடமுடியாமல் விழிக்கிறேன் அதில் பலதோஷங்கள் இருக்கின்றனவென்று அதைவிலக்க உபதேசத்தைச்செய்வார். அதுபோல நமக்காக நமது முன்னோர்களான "தட்சர், விசுவாமித்திர்,வஸிட்டர், அகஸ்தியர், முதலிய மஹரிஷிகள் அவர்கள் அநுஷ்டித்துவந்த தர்ம்மங்களின் குணதோஷஸமூகங்களை பாரதாதிபுராணங்களில் வரைந்து வைத்திருக்கிறார்கள், அவர்களைக்கேட்டுத் தெரிந்துகொள்வது நமது முன்னேற்றத்திற்கு எவ்வளவுசுலபம், அவர்களிடம் எவ்விதம் கேட்கமுடியுமென்றால் "தட்சரின்" சரித்திரத்தால் தர்ம்மதத்துவம் எவ்விதம்அறிந்தோம் அதுபோல ஒவ்வொருரிஷிகளின் அநுஷ்டானமுறைகளை புராணநிகளின் மூலமாகத்தெரிந்துகொள்வதே அவர்களிடம் கேட்பதாகும்.

புராணத்தைக் கட்டுக்கதையென்று தள்ளிவிட்டால் தர்ம்மதத்துவம் எங்குகாணமுடியும்? மனிதன் இஷ்டப்படி நடக்கசாஸ்திரம் அநுமதிப்பதில்லை அதைத்தப்பிநடந்தால் அவமானம் (மானக்கேடு) நிச்சயம்.

"स्थानभ्रष्टानशोभन्ते दन्ताः केशानखानराः।"

பல், ரோமம், நகம், மனிதன், இவைகள் தன்னிருப்பிடம் விட்டு நழுவி விட்டால் கேவலமானதன்மையை அடைந்துவிடுகின்றன தண்ணீரை ஆச்ரயித்த ஓர்முதலே யானையையும் தன்னிடமிழுக்க சக்திபெறுவதுபோல, பிராமணன் ஸ்வதர்ம்மபலத்தால், எதுவும் செய்ய சக்திபெறுவான்.

அகஸ்தியர், விசுவாமித்திரர், இவர்கள் அற்புதச் செயல்கள் ஸ்வதர்ம விசேஷ பலத்தாலேயே செய்தார்களென்று சரித்திரம் கோஷிக்கவில்லையா. இதிலிருந்தும் வேதம், ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களால் விளங்கிநிற்கும் மஹான்களின் மார்க்கத்தைக் கைப்பற்றி நடப்பவனுக்கு ஈசனே துணைநின்று அனுக்கிரஹிக்கின்றார்.

தர்ம்மவழியை யனுஸரிக்காதபிராமணன் நிலைதப்பினவனுவான். அவனை ஈசன்சிட்சிக்கவும் செய்கிறார், தாமரைக்கு சூரியன் தந்தையும், தண்ணீர் தாயுமாகும். அத்தாமரையும் பிடுங்கப்பட்டு ஸ்தானம்தப்பிப்போனால் தன்தாயாகிய ஜலமே அதைஅழுகச் செய்துவிடுகிறது, அதையே கரையிலெடுத்துப்போட்டால் தந்தையாகிய சூரியன் காயவைத்துக் கொன்றுவிடுகிறான், தாமரை நிலைதப்பிய காரணத்தாலல்லவோ நாசத்தைஅடைந்தது, அதுபோல நாமும் தன் ஸ்வதர்ம்ம நிலைதப்பிநடந்தால் லோகத்திற்கு மாதா, பிதாக்களான "பார்வதிபதியும்" சிட்சைசெய்யாமல் விடமாட்டார் என்ற தத்துவத்தை "தட்சயாக" சரித்திரம் நன்குவிளக்கி வைப்பதால் "ஸ்வதர்ம்மமார்க்கமே சுகம்பெறும்வழி" அதற்கு தெய்வமே துணை என்பது ஸித்தம். சுபம்!

K. S. சங்கரராம சாஸ்திரி
கொட்டாரக்கரை.

---

## மரணத்தைத் தடுக்க மார்க்கம்.

காலத்தின் கோலத்தால் ரிஷிவாக்கியங்களின் தத்துவ ஸாரத்தையறியாமல் கட்டுக்கதைகளென்று அதை நிராகரிக்கும் நண்பர்களுக்கு ரிஷிவாக்கிய தத்துவங்களை நன்கறியும்படி காட்டுவதே மதாபிமானிகளின் தர்மமாகும். நமது மதத்தத்துவங்களோ

ரிஷிவாக்கியங்களிலடங்கி நிற்கின்றன. இவ்வுலக ஸுகபோக ஸாதனம் யாவும் அதிலேயே நிலைபெற்றிருக்கிறது. இதையறியாதவரையில் அவனம்பிக்கைகொள்வது ஸஹஜம். ஆகையால் அதன் உண்மையை விளக்கிவைப்பதே உத்தமதர்மமாகும்.

உலகில் யாவரும் முக்கியப்பிரியமென்று விரும்புவது செல்வம் (பணம்.) தன் புத்திரனைத் தூக்கிவிட தண்டனை விதித்தால் இச்செல்வத்தை அளவுக்குமிஞ்சிச் சிலவுசெய்தால் அத்தண்டனையினின்று அவனைக் காப்பாற்றி விடலாமென்று வரும்போதுபுத்திரரக்ஷணத்திற்காக செல்வத்தையிழப்பதால் செல்வத்திலும் புத்திரன் பிரியனாகிறான். மேல்சொன்ன கொலைக்குற்றம் தகப்பன் மீது சுமத்தப்படும்போது புத்திரனைத் தள்ளிவிட்டு தன்னை ரக்ஷித்துக்கொள்கிறான். புத்திரனிலும் தன்னிடம் பிரியமுண்டாகிறது.

ஒருவனுடைய கண்ணைக் குத்தவரும்போது கையினால் தடுத்து கண்ணை ரக்ஷித்துக்கொள்கிறான். இந்த அநுபவத்தினால் கர்மேந்திரியங்களிலொன்றாகிய கையைவிட ஞானேந்திரியங்களிலொன்றாகிய கண்ணினிடம் அதிகப்பிரியம் வருகிறது. தூக்கிலிட சிக்ஷைபெற்ற புருஷனிடம் உன்னைத் தூக்கிலிடட்டுமா? அல்லது உன் கண்களைத் திருகி எடுக்கட்டுமா? இதில் எது உனக்கு இஷ்டமென்று கேட்டால் கண்ணைத் திருகிக்கொள்வது ஸம்மதம் என்கிறான். இதனால் கண்முதலிய ஞானேந்திரியங்களைவிட அதிகம் பிரியமானது உயிர்வாழ்வதில்தான் என்பது ஸ்பஷ்டமாகி இருப்பதால் ஸர்வஜீவபிராணிகளுக்கும் உயிரைப்போலப் பிரியமுள்ள வஸ்து வேறொன்றிருப்பதாகக் காணப்படவில்லை. முக்கியமாக சரீரத்தால் எல்லா அவயவங்களும் இந்திரிய வியாபாரங்களும் ஜீவனை ஆசிரயித்திருக்கின்றன. ஜீவனில்லாவிடில் ஸ்தூல சரீரவியாபாரமுமில்லை. ஆனால் ஸ்தூலசரீரவியாபாரமில்லாவிடினும் ஜீவன் இருந்துகொண்டேயிருக்கும். இந்த நியாயத்தினால் ஜீவன் ஆதாரமும் சரீரம் முதலியவை ஆதேயமும் ஆகின்றன. சரீரத்திலுள்ள ஸகல அவயவங்களுக்கும் வெவ்வேறு பெயரும் தொழிலும் காணப்பட்டபோதிலும் அவைகளின் ஆதாரமாகிய ஜீவனிலல்லவா இவைகளில் அபிமானம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஜீவனுக்கு ஏதாவதோர் அபாயம் ஸம்பவிக்கப்

போவதாக அறியப்பட்டால் எல்லா அவயவங்களும் ஒன்று சேர்ந்து ஜீவனை ரக்ஷிப்பதற்காக தயாராகிவிடும், இதனால் ஜீவனை முக்கியவஸ்துவாகவும் அதன் ரக்ஷைக்காகவே மற்ற இந்திரியங்களும் ஏற்பட்டிருப்பதாக விளங்குகிறது

இந்தஜீவனை ரக்ஷிப்பதற்க்காகவே சாஸ்திரங்கள். தோன்றி இருக்கின்றன, அவைகளில் பலமார்க்கங்களும் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஸர்வப்ராணிகளும் ஸுகமாகவும் எளிதாகவும் ஸந்தோஷமாகவும் செல்லக்கூடிய மார்க்கம் அதில் யாதென அறிந்துகொள்ளவேண்டும்.

ஜீவனுக்கு பயம் யமனிடமிருந்து உண்டாகிறது, அவனை ஜயித்தால் மரணத்தைத் தடுக்கலாம். அவனை ஜயிக்க முயற்சித்தால் சக்தி நமக்குண்டாவது நிச்சயம். அந்த முயற்சி சாஸ்திர மார்க்கமாகவிருக்கிறது. சாஸ்திரமர்ர்க்கத்தில் யமனுக்கு ஸ்தானமில்லை. துர்மார்க்கத்தில் எப்பொழுதும் ஸ்தானமுண்டு, துஷ்டர்களை சிக்ஷிப்பதற்காகவே உத்தியோகம் பெற்றவனானபடியால் துஷ்டர்களையே தேடிச்செல்வான், துஷ்டர்களின் கூட்டத்திலேயே துஷ்டர்களிருப்பார்கள், ஆகையால் யமனுக்கு ஸன்மார்க்கத்தில் அவகாசமில்லை, ஸன்மார்க்கபுருஷர்களின் தர்ம்மகாரியத்திற்கு ஆவசியம்நேரும்போது யமனை அழைத்து வருவதுமுண்டு, அவர்களையும் கவனிக்கவேண்டியது. யமன்கடமையே. இந்தயமதர்ம்மராஜனின் பாதையானது திடீரென்று சிலஸமயம் வந்துவிடுகிறதேஎன்றால் அத்தியாவசியமானால் அதிகாரிவருவது ஸகஜம்தானே, அதர்மம் மிகுதியே யமன் வருவதற்கு ஆவசிய காலமாகிறது. வசூரி, விஷூசி முதலிய அரிஷ்டங்களை நாம் ஓர் தேவதையின் கோபமென ஒப்புக்கொள்கிறோம். அம்மாதிரியான அரிஷ்டங்களுக்கு அதர்மமே முக்கிய காரணம். வசூரி முதலிய அரிஷ்டங்களைத் தடுக்கத்தக்க ஔஷதம் ஸத்கர்மானுஷ்டானமென்றே நம்பிச்செய்துவரும் நமது வெகுகாலமான வழக்கமே அதற்கு லக்ஷியம்.

நமக்கு இஹலோக ஸுகஸாதனங்களை அளிப்பவர்கள்தேவர்களே. அவர்களாலளிக்கப்பட்டிருக்கும் ஸாதனங்களால் அவர்களை ஸந்தோஷிக்கச்செய்து சிரேயஸ்ஸைப்பெற்று வாழ்ந்துவர வேண்டுமென்று

परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ।

என்ற ஆஞ்ஞையால் கீதாசாரியனான பகவான் உபதேசித்திருக்கிறார்.

நாம்செய்துவரும்ஒவ்வொரு தர்மகாரியங்களும்தேவதிருப்தியையும் உலகதிருப்தியையும் அளிக்கக்கூடியதாகவே இருக்க வேண்டும். அதுவே சிறந்த தர்மம், சிறந்த தர்மங்களில் யக்ஞத்தையே முதன்மையாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். இதனால் தேவாதிஸகலவுலகதிருப்தியும் ஏற்படுவது அனுபவமான உண்மையே, மரணத்தைத் தடுப்பதற்குக்கூட இந்த யஞ்ஞமே முக்யமான ஸஹாயமாகிறது.

ஸ்வாயம்புமனுவும் இச்சிறந்தயக்ஞத்தால் பகவானை திருப்தி செய்து மிக மேன்மைபெற்றிருக்கிறாரென்று துருவனின் மாதா பாகவதத்தில் உபதேசித்திருக்கிறாள், இந்த யஞ்ஞம் எங்ஙனமுண்டாச்சுது என்று கவனித்தால் பகவானே இதை உபதேசித்திருக்கிறார்,

सहयज्ञाः प्रजास्सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेनप्रसविष्यध्वमेषवोऽस्त्विष्टकामधुक् ॥

பிரும்மதேவர் ஆதியில் யஞ்ஞத்தோடு பிரஜைகளை ஸிருஷ்டித்து அவர்களை நோக்கி இது உங்களுக்கு இஷ்டபோகங்களைத்தரும் காமதேனுவாகும். இந்த யஞ்ஞத்தாலேயே தேவதைகளை ஆராதித்து இஷ்டபோகங்களையடையுங்கள் என்று உபதேசித்திருப்பதாலே இருந்து மரணத்தைத்தடுக்க நாம் இஷ்டப்பட்டால் அவ்விஷ்டமும் பெறலாமென்று ஒருவாறு நிச்சயமாகச் சொல்லலாம். இஷ்டகாமதுக் என்ற பதமே போதுமான ஆதாரமாம், போதாமல் போனால் இதை இன்னும் பாகவதசாஸ்திரத்தால் விளக்குவாம். சௌனகாதிரிஷிகள் ஸத்ரயாகமத்தியில் நம்போலுள்ளவர்களுக்காகவே ஓர் திவ்வியக்ஷேமமார்க்கத்தைக் கண்டுபிடித்துவைத்திருக்கிறார்கள். இம்மார்க்கம் உலக கர்த்தாவான பகவானுக்கும் ஸர்வப்பிராணிகளுக்கும் திருப்தி யளிக்கக்கூடியது. இது கீதாசாஸ்திரத்தால் விளக்கப்பட்டிருப்பதாலும் விஸ்தாரம் பெருகுமென்ற பயத்தாலும் இங்கு வரையவில்லை. பாகவதத்தில் ஸத்திரயாகமத்தியில்ரிஷிகள்ஸூதமுனிவரோடின்ஸம்பாஷணையால்என்னபிரயோ

ஜனம். ஏனெனில் ஆயுள் வீண்செலவாகிறது அது அவ்விதம் செலவு
செய்யக்கூடியதல்ல இதை பெருகச்செய்வதற்கே சாஸ்திரங்கள்
தோன்றியிருக்கிறது. ஆனால் அதற்கு சத்துருக்களும் மிகவுள்ள
தாகிறது. சத்துருக்களை ஜயித்து ஆயுளைவிருத்திசெய்வது அஸாத்
தியமான காரியம். ஆனால் தகுந்த காலத்தை எதிர்பார்த்திருந்து
விருத்திசெய்துகொள்ளவேண்டும், மனிதர்களோ அற்பஆயுளுள்ள
வர்கள் மரணமடையக்கூடியவர்கள், ஆனால் மோக்ஷத்தை விரும்
புகிறவர்கள். இவ்வளவு அபாயத்திலிருக்கும்மனிதனுக்குமோக்ஷம்
பெற இது தகுந்த தருணம். ஏனென்றால் இவனுக்கு மரண ஸம
யம் நிச்சயமில்லை. இப்போது சிறிதுகாலத்திற்கு மரணபயமு
மில்லை என்பது நிச்சயம். இச்சமயத்தில் மோக்ஷம் பெறமுயர்ச்
சித்தால் அடைந்துவிடலாம் ஏனெனில்.

इहोपहूतोभगवान् मृत्युश्शामित्रकर्मणि ।
न कश्चिन् म्रियते तावत् यावदास्त इहान्तकः ॥
एतदर्थं हि भगवानाहूतः परमर्षिभिः ।
अहोनृलोके पीयेत हरिलीलामृतं वचः ॥

மரணத்தையளிக்கும். மஹிமைபொருந்திய யமனை இந்தஸத்ரயாக
த்தில் பசு ஹிம்ஸைசெய்வதற்காக அழைத்துவந்திருக்கிறோம்இந்த
யமதர்மராஜன் இங்குஇருக்கும்வரையில் எவனும் மரணமடைய
மாட்டான்.

இந்த மானிடலோகத்தில் பகவல்லீலையாகிய அமுதம்கலந்த
சொற்களை அனுபவிக்கவேண்டுமென்பதர்க்காகவே மஹரிஷிகள்
மஹிமைதங்கியயமதர்ம்மராஜனை அழைத்துவந்தார்கள் ஆகையால்
உலகில் மரணமில்லாதஸமயம் யஞ்ஞம்நடக்கும் காலமேயாம்,
அவ்விடையில் நற்காரியங்களால் க்ஷேமம்பெறத்தகுந்தஸமயமாம்.
ரிஷிகள் இத்தருணத்தில் பகவத்கதாமிருதத்தை பானம்செய்து
திருப்தியடைந்தார்கள், யாகம்நடைபெறும்வரை உலகத்திற்கே
மரணபயத்தை நீக்கினரிஷிகளின் பேருபகாரமானது ஸர்வப்
பிராணிகளுக்கும், எவ்வளவுதிருப்தியை யளிக்கக்கூடியதென்று
வாசகர்களே ஊகித்துக்கொள்ளுங்கள், மரணபயத்திர்க்கு
மேலானபயமில்லை அதிலிருந்து ரக்ஷித்தவனுக்கு மேலானவனு
மில்லை என்றுசாஸ்திரஸித்தாந்தம். இதனால் நமதுரிஷிகள் இந்த

ஸத்திரயாகத்தால் உலகத்தையே மாணபயத்திலிருந்து விடுவித்தார்களென்று சொல்லத்தடைஎன்னவந்தது. மாணத்தைத்தடுக்க யாககாலமானது முக்கியமாவதால் யாகத்திற்குளவ்வளவுமஹிமை உள்ளதாகிறது இம்மாதிரியான யஞ்ஞம்நடந்துவந்தால் உலகம் ஏன் ஸுகம்பெறமாட்டாது இதனால்தான் யாகதரிசனத்துக்கு அழைக்கவேண்டிய நியாயமில்லைஎன்று "ஸதீதேவி" பாமசிவனிடம் எடுத்துரைத்தாள். அம்முறையே நாளதுவரை பெரியோர்களால் கையாண்டும் வறப்பட்டிருக்கிறது, நாம் இதனால்அறிந்து கொள்வதென்னவெனில் நமது ரிஷிகளின் ஸத்தர்மானுஷ்டான மார்க்கமாக யாகாதிகிருதுக்களை பகவதர்ப்பணமாகச் செய்து வந்தால் அதனால்தெய்வதிருப்தியும் அதிலிருந்துமழையும், அதனால் ஸர்வலோகஸுகமும் அகாலமாண துரிதத்திற்கு நிவிருத்தியும் ஏற்பட்டு இகபரஸுகம்பெற்று வாழ்வோம்என்பதில்ஸந்தேஹமில்லை. இம்மாதிரியாக அனந்ததத்துவாகஸ்யங்களை அடக்கிவைத்திருக்கும் ரிஷிவாக்கியத்தைக் கட்டுக்கதையென்று உறைக்கும்கேவலமொழி எவ்வளவு துர்ப்பலமானதென்று சொல்லவேண்டியதில்லை. ஸன்மார்க்கத்தை விருத்திசெய்யத்தகுந்தஉத்ஸாஹசக்தியைஸர்வயஞ்ஞரூபியான பகவான் நமக்கருள்புரிவாருக. சுபம்!

S. சங்கராம சாஸ்திரி,
கொட்டாரக்கரை.

---

# ஸ்ரீயான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(272-வது பக்கத்தொடர்ச்சி.)

## 25 சிவார்க்கமணிதீபிகை.

நமது தீக்ஷிதமணிகளின் பிரக்கியாதி எத்திசையிலும் வியாபிக்கவே பற்பல தேசங்களிலிருந்து வெகு வித்வான்கள் ஸகல சாஸ்திரங்களையும் தீக்ஷிதாளையடைந்து அவர்களுடைய அனுக்கிரஹத்தால் தெளிவாகத் தெரிந்துகொண்டனர். அவரவர்களுக்குப் புலப்படும்படி அவ்வப்போது அனேக சாஸ்திரக்கிரந்தங்களையியற்றி தீக்ஷிதாள் எங்கும் பிரசாரமாகும்படி சிஷ்யாள் மூலமாய் நிலைநிற்கச்செய்தார்கள்.

சிவபக்தசிகாமணியான சின்னபொம்மனுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீகண்டபாஷ்யத்திற்கு விஸ்தாரமானசிவார்க்கமணிதீபிகை என்ற வியாக்கியானத்தையியற்றினர்

சிவார்க்கமணிதீபிகை யியற்றினதும், பண்டிதமணிகள் நிறைந்த ஸபையின்நடுவில் சின்னபொம்மராஜன், தீக்ஷிதமணிகளை ஸ்வர்ணபீடத்தில் அமர்த்தி ஸ்வர்ணங்களால் அபிஷேகஞ்செய்து மேன்மைப்படுத்தி புகழ்பெற்றான்.

ஸமரபுங்கவதீக்ஷிதர் தமது யாத்திராபிரபந்தத்தில் விஸ்தாரமாய் தீக்ஷிதாளின் மஹிமையை வர்ணிக்கும்போது பிரகிருதவிஷயத்தையும் விளக்கியிருக்கிறார். அஃதாவது

कर्णः श्रीचिन्नबोम्मक्षितिपतिरभितो लम्भयन् शातकुम्भ-
स्तोमं हेमाभिषेकप्रणयनसमये यस्य मूर्तिं मदास्याम् ।
रेजे श्रीरङ्गराजाध्वरिवरकलशाम्भोधिलब्धप्रसूते-
र्विद्याकल्पद्रुमस्य स्वयमिव कलयन् जातरूपालवालम् ॥

“ கர்ணனுக்கொப்பான சின்னபொம்ம பூபதியானவன் ஸுவர்ணாபிஷேகம் செய்யுந்தருணத்தில் புகழத்தக்க எவருடைய மூர்த்திக்கு நாற்புறமும் ஸுவர்ணஸமூஹத்தைச் சேர்ப்பித்துக்கொண்டு ஸ்ரீரங்கராஜ தீக்ஷிதாளாகிற பாற்கடலிலுதித்த வித்யாகற்பகதருவுக்கு ஸுவர்ணப்பாத்தியைச்செய்துகொண்டு பிரகாசித்தானோ”
என்று,

நள சரித்திர நாடகத்தில் நீலகண்ட தீக்ஷிதாளும்,

हेमाभिषेकसमये परितो निषण्ण-
सौवर्णसंहतिमिषाच्चिनबोम्मभूपः ।
अप्पय्यदीक्षितमणेरनवद्यविद्या-
कल्पद्रुमस्य कुरुते कनकालवालम् ॥

என்ற சுலோகத்தால் இதே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்றும்

नानादेशनरेन्द्रमण्डलमहायत्नातिदूरी भव-
त्कादाचित्कपदारविन्दविनतेरप्पय्य यज्वप्रभोः ।
शैवोत्कर्षपरिष्कृतैरहरहस्सूक्तैः सुधा(स्यन्दिभिः)क्षालितैः
फुल्लत्कर्णपुटस्य बोम्मनृपतेः पुण्यानि गण्यानि किम् ॥

பற்பல நாட்டுமன்னர்களுக்கும் அரிதான தீக்ஷிதாளின் சரண ஸேவைபெற்றவனும், அமிழ்தத்தைப் பெருகவிடுகின்றவைகளும் சைவத்தின் மேன்மையால் பரிஷ்கரிக்கப்பட்டவைகளுமான தீக்ஷிதாளின் அனுதினமும் அனுக்கிரஹிக்கப்படுகின்ற நல்மொழிகளால் பயன்படும் செவிகளையுடையவனுமான பொம்மாஜனின் புண்ணியங்கள் எண்ணக் கூடியவைகளா என்ன? என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயமானது நமது தீக்ஷிதாளின் அபிஜனகிராமமான அடையப்பலத்துக் காலகண்டேசுவராலயத்துக் கற்களில் செதுக்கப்பட்ட அக்ஷரங்களால் வெளியாகிறது, நமதுதீக்ஷிதாள், சிவார்க்கமணிதீபிகையை யளிக்கின்ற (50) பற்பல தேசத்து பண்டிதர்களுக்கும், அவ்விடத்திலேயே வேண்டிய ஜீவனோபாயத்தை, சின்னபொம்மனால் ஏற்படுத்தினார்என்றும் அக்கற்களில் செதுக்கப்பட்ட அக்ஷரங்கள் புலப்படுத்துகின்றன.

மேலும் தீக்ஷிதாள் அத்தருணத்தில், சிவதத்வவிவேகம், சிவகர்ணாமிருதம், சிவத்யானபத்ததி, ஸ்ரீகண்டபாஷ்யதீபிகா, சிவாத்வைதநிர்ணயம், பஸ்மவாதாவளி, ஆதித்யஸ்தவரத்னம், ஆத்மார்ப்பணம், மானஸோல்லாஸம், பிருமதர்க்கஸ்தவம், முதலான கிரந்தங்களையியற்றி சிஷ்யர்களுக்கு போதித்தார்கள்.

## 26 படர்களை ஸ்தம்பிக்கச்செய்தது.

இவ்விதம் நமது தீக்ஷிதமணிகள் வேந்தனை சிவபக்தசிகாமணியாக்கியும் சைவக்கிரந்தங்களை சிஷ்யப்ரசிஷ்யவர்க்கங்கள் மூலமாய் பரவச்செய்வதையும் ஸஹியாத விரோதிகளில் முதன்மைபெற்ற தாத்தாச்சாரியார் லௌகிக கார்யங்களிலும் திறமைவாய்ந்த மந்திரிப்பதவியிலுமுள்ளதால் குடிகளிடம் செல்வாக்குள்ளவராயிருந்தார். பாமரஜனங்களுக்கு அறிவாளிகளின் திறமையறிய சக்தியில்லாமல் தாத்தாச்சாரியாருக்கு வசப்பட்டிருந்தாலும் தீக்ஷிதமணிகளின் தெய்வத்தன்மையை நன்குணர்ந்தவர்களாயினர்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.